DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

Case No : CC.No.198/2018	Deposition of Witness for : PW5
Name : ஜெனிபர்	Father/Husband Name : அமல்ராஜ்
Age : 28	Village : பிரண்டார்குளம்
Taluk : சாத்தான்குளம்	Calling : IT கம்பெனியில் வேலை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17 February 2026. Accused absent. Petition U/s.355 BNSS filed and allowed.

முதல் விசாரணை :–

1. நான் தற்போது செங்கல்பட்டில் குடியிருந்து சென்னையில் உள்ள IT கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். எதிரிகளை தெரியும், எனது ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 23.04.2017 ஆம் ஆண்டு நான் காலை 7 மணியளவில் வெளியே சென்றுவிட்டேன். பின்பு மாலை 5 மணிக்கு நான் வீட்டிற்கு வந்தபோது வீட்டின் அருகே உள்ளவர்கள் எனது அம்மாவை எதிரிகள் அடித்ததாக கூறினார்கள். நான் உடனே எனது அம்மாவை சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் எனது அம்மாவிடம் விசாரித்தபோது தெருவில் உள்ள குழாயில் தண்ணீர் பிடிக்கும்போது எதிரிகள் தன்னை அடித்ததாக கூறினார். மேற்கொண்டு எனக்கு எதுவும் தெரியாது.

2. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பகுதி அளவில் பிறழ் சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் கோரி, அவ்வாறே அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

3. கடந்த 22.04.2017 ஆம் தேதி எங்கள் வீட்டின் முன்பு இருந்த குடிநீர் பைப் இடமாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மறுநாள் 23.04.2017 ஆம் தேதி காலை 8 மணிக்கு அ.சா.1 குடிநீர் பிடிப்பதற்காக சென்றார் என்றால் சரிதான். அப்போது எதிரிகள் எனது அம்மாவை நீ எப்படி இங்கு தண்ணீர் பிடிக்கலாம் என்று கேட்டு ஆபாசமாக பேசி எனது அம்மாவை கையால் அடித்தும், பற்களால் கடித்தும் காயப்படுத்தினார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக நான் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.02.17 17:47:12 +0530

மறுவிசாரணை : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.02.17 17:47:20 +0530

Judicial Magistrate, Sathankulam.